DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 82/2018 |
| Deposition of Witness for | : | P.W.6 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | தமிழரசன் |
| Father's Name | : | |
| Village | : | உருவாட்டி |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.01.2026

**முதல் விசாரணை:**

நான் உருவாட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக கடந்த 25.04.2017ம் தேதி ஜீவா நகர் சென்றுவிட்டு திரும்பி உருவாட்டிக்கு வந்தேன். அப்போது மாவலிகோட்டை கிராமத்தை கடந்து தான் வரவேண்டும், அப்போது விமலா வீட்டு அருகே காவல் அதிகாரிகள் நின்று கொண்டிருந்தார்கள். என்ன விவரம் என்று நான் கேட்டேன். விமலா மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்து, இடத்தை பார்வையிட்டு அதற்கான வரைபடம்போட வேண்டும் அதற்காக வந்தோம் என்றார்கள். என்னை அழைத்து சென்று வீட்டின் மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் தயார் செய்த பார்வை மகஜரில் என்னை கையெழுத்து போடச் சொன்னார்கள் நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். (**அந்த கையெழுத்துக்கள் மட்டும் அ.சா.ஆ.3, 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்கண்ட

கையெழுத்துக்களை நான் எதற்காக போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீஸார் என்னை விசாரித்தார்கள். **அரசு தரப்பு வழக்கறிஞர்வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பகுதியாக பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 25.04.2017ம் தேதி இவ்வழக்கின் எதிரியை கைதுசெய்ய காவல் ஆய்வாளர் வந்து என்னையும் சாட்சி செபஸ்தியானையும் உடன் அழைத்ததன் பெயரில் அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு தாஸ்புரம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த மாவலிக்கோட்டை கனகராஜ் மகன் பாக்கியராஜ் என்பவரை கைது செய்தார்கள் என்றும், பின்பு வழக்கின் எதிரி பாக்கியராஜ் தானாக முன்வந்து சாட்சி விமலாவை இரும்பு கம்பியால் அடித்து காயம் ஏற்படுத்திவிட்டு பின்னர் இரும்பு கம்பியை காண்பித்து இன்று தப்பித்து விட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்துவிட்டு ஓடிவிட்டதாகவும், அந்த இரும்பு கம்பியை உருவாட்டி விநாயகர் கோவில் அருகே மறைத்து வைத்திருப்பதாகவும் எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் செபஸ்தியான் என்பவரும் காவல் ஆய்வாளர் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தோம் என்றும், அதன் பின்னர் அன்றைய தினமே மாலை 5.30 மணிக்கு உருவாட்டி விநாயகர் கோவில் பின்புறம் எதிரி மறைத்து வைத்திருந்த இரும்பு கம்பியை எடுத்து காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கும் போது ஆய்வாளர் அவர்கள் எங்கள் இருவர் முன்பும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்றும்,அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் செபஸ்தியான் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்று போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் ஜீவா நகல் எனக் குறிப்பிடுவது உருவாட்டியில் உள்ள ஜீவா நகர் என்றால் சரிதான். உருவாட்டிக்கும் மாவலிக்கோட்டைக்கும் எத்தனை கிலோ மீட்டர் இருக்கும் என்றால் 1 கீ.மீட்டர் இருக்கும். மாவலிக்கோட்டை உருவாட்டிக்கு தெற்கே உள்ளது. அ.சா.ஆ.3 மற்றும் 4 காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான்.

அவர்கள் டைப் செய்ய வேண்டும் என்று சொன்னதால் அங்கு வைத்து போட்டேன். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. என்னை போலீஸார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் காலை சுமார் 10.00 மணி இருக்கும். போலீஸார் என்னை விசாரித்தபோது மாடியில் வைத்து கையெழுத்து வாங்கியதாக நான் சொல்லவில்லை என்று சொன்னால் அவர்கள் வீட்டு மாடியில் வைத்து கையெழுத்து செய்தேன். மாவலிக்கோட்டை உருவாட்டி பஞ்சாயத்தை சேர்ந்தது என்றால் சரிதான். நான் உருவாட்டி பஞ்சாயத்து தலைவராக இருந்துள்ளேன் என்றால் சரிதான்1986 முதல் 1991 வரை இருந்துள்ளேன்.

2. இந்த பஞ்சாயத்து தேர்தலில் எதிரியின் தகப்பனார் எனக்கு எதிராக செயல்பட்டார் என்றால் இல்லை. விமலா ஒரு பொய்புகார் கொடுத்துள்ளார் என்றும், எனக்கு ஏற்கனவே இருந்துள்ள முன்பகையின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,<br>சார்பு நீதிபதி,<br>தேவகோட்டை. |